28th April 1960]

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தத் திட்டத்தின் கீழ் யார் யாரெல்லாம் வேலை செய்து வருகிறார்களோ, அல்லது எந்தெந்த ஸ்தாபனங்கள் எல்லாம் வேலை செய்து வருகிறதோ அந்த ஸ்தாபனங்களுக்குத்தான் கொடுக்க முடியும். இதன் கீழ் ஒரு வேலையுமே செய்யாத இடங்களுக்கு அல்லது ஸ்தாபனங்களுக்கு எப்படி கொடுக்க முடியும்.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், மாதர்கள் சகலத் துறைகளிலும் அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்டிருப்பவர்கள். சமூக முன்னேற்றத்திற்கு முக்கியமானவர்கள், மாதர்கள். ஆகவே, அவர்கள் தீவிரமாக கல்வியில் முன்னேறுவதற்காக உடனடியாக ஏதாவது செய்யவேண்டும் என்பதை அமைச்சர் அவர்கள் உணருகிறார்களா ? அப்படியானால் அதை முன்னிட்டு மாதர்களுக்கு கல்வி கிடைப்பதற்காக ஹரிஜனங்களுக்குக் கல்விச் சலுகைக் கொடுப்பதுபோல் எல்லா சலுகைகளும் கொடுக்க சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பெண்கள் அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுவது அவர்களுடைய சொந்த அனுபவமாய் இருக்கலாம். அதைப்பற்றி எங்களுக்குத் தெரியாது. அதுமட்டுமல்ல, அவ்வாறு அடக்கி ஒடுக்கி வைப்பது தவறு. அவர்களுக்கு கல்வி கொடுப்பதற்காக எல்லா சலுகைகளும் கொடுக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது.

Playgrounds for schools

* 858 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to assign playgrounds for each Secondary School in this State ?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI K. ANBAZHAGAN : மாணவர்களிடையே, நல்ல ஒழுக்கத்தையும் நேர்மையையும் வளர்க்கவேண்டுமானால், முக்கியமாக தேக பயிற்சியும், அதற்கொத்த விளையாட்டு வாய்ப்புகளும் வேண்டுமென்பதை அரசாங்கம் ஒப்புக்கொள்ளுகிறதா ? அப்படியானால் அவர்களுக்கு தேவையான விளையாட்டு மைதானங்களை அளிக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதில் கேட்டிருக்கிற கேள்வியில் . . . . . .
to assign playground for e[illegible]n[illegible]y school in this state என்று இருக்கிறது. இது முடியாத காரியம். இந்த விஷயம் முன்னமேயே பட்ஜெட் உரையின் போது கூட விவாதிக்கப்பட்டிருக்கிறது. போன வருஷம் இதற்காக 72,500 ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இது 24 பள்ளிக்கூடங்களுக்காக ஒதுக்கப்பட்டது. மேலும் இந்த வருஷமும் இதற்காக நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் போய்க்கொண்டிருந்தால் இன்னும் நான்கைந்து வருடங்களில் எல்லா பள்ளிக்கூடங்களுக்கும் இது கிடைத்துவிட முடியும் என்று நினைக்கிறேன்.